Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


# Women in *Silappathikaram*

**Dr. D. Nagalakshmi,** Associate Professor, Tamil Research Centre. S.T. Hindu College, Nagercoil-02, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0007-0539-2014
**DOI: 10.5281/zenodo.14744916**

## Abstract

*The main purpose of any epic is to glorify femininity. In fact, "Silapathikaram" suggests to lift the inferior using speech. This epic is full of cultural elements. This epic shows the power of the Moovenders and the pride and wealth of the country. The purpose of the article is to explore Tamil culture, civilization, arts, people, life, business, festivals etc. The author Elangovadigal was a Jain saint, to make women proud, he created Kannagi, Madhavi and Gopperundevi in the epic based on the true incidents. According to the context of that time, Kannagi is bound to her husband and lives as a single woman, but Madhavi was born in the Kanikaiyar clan but does not want to live according to clan customs as a prostitute. She made the society aware of the chastity of one person. Elangovadigal has shown that as the Pandya king Nedunchelian died to establish justice, his wife Koperundevi also died on the spot unable to bear the death of her husband. It is clear that the pride of worshipping Kannagi as a deity belongs to the everlasting writings of Elangovadigal. This article traces down the women as portrayed in "Silapathikaram."*

**Keywords:** Textual, Computational, Country Resources, Cultural Elements, Perungapiyam

## References

[1] Saminathayar, U V. (T.A), *Silapathikaram Moolamum Arumpathauraiyum*, Tamil University Publication, 10th Edition, Thanjavur.
[2] Sivagnanam, Ma, Po, Si. *Silappathigara Thiranaivu.* Pongodi Pathippagam, Mylapore, Chennai,1999.
[3] Sivagnanam, Ma, Po, Si. *Silappathigara Aaiurai.* Pongodi Pathippagam, Mylapore, Chennai, 2001.
[4] Yogambal, N. *Kappiya Magalir Oru Puthiya Kannottam.* Mulai Publication, Chennai, 2015.
[5] Venkataraman, U, Dr. *Kappiya Ilakkiyam.* Madurai Kamarajar University, Madurai, Edition -2005.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X



# சிலப்பதிகாரத்தில் பெண்கள்

**முனைவர் தே. நாகலெட்சுமி**, இணைப்பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம், தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்-02. தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0007-0539-2014
DOI: 10.5281/zenodo.14744916

**ஆய்வுச் சுருக்கம்**

*காப்பியநோக்கங்களில் ஒன்று பெண்மையை போற்றுவது "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தல்" என்பது சிலப்பதிகாரம் உணர்த்தும் உண்மை. காப்பியத்தில் பண்பாட்டுக் கூறுகள் நிறைந்து காணப்படுகின்றன. இக்காப்பியம் மூவேந்தர் பெருமை, நாட்டுவளம். தமிழரின் பண்பாடு, நாகரீகம், கலைகள், மக்கள், வாழ்வியல், வணிகம், விழாக்கள் போன்றவற்றை தன்னுள் கொண்டுள்ள பெருங்காப்பியம், இக்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள பெண் பாத்திரங்களை அக்கால சமூக சூழல்களோடு ஆராயும் நோக்கில் சிலப்பதிகாரத்தில் பெண்கள் என்னும் இவ்வாய்வு தலைப்பு அமைந்துள்ளது. சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் சமணத்துறவி ஆயினும் பெண்களுக்கு பெருமை சேர்க்கும் விதமாக காப்பியத்தில் கண்ணகி, மாதவி, கோப்பெருந்தேவி இம்மூவரையும் அக்கால சூழலுக்கு ஏற்பப் படைத்துக் காட்டியிருக்கிறார். கண்ணகி கணவனுக்கு கட்டுப்பட்டு பேசாமடந்தையாக வாழ்பவள், மாதவி கணிகையர் குலத்தில் பிறந்தாலும் குலவழக்கப்படி வாழவிரும்பவில்லை. ஒருவனுக்கு ஒருத்தி என்ற கற்பு நிலையை சமுதாயத்திற்கு உணர்த்தியவள். நீதியை நிலைநாட்ட பாண்டிய மன்னனும் இறந்ததால் மனைவியும் வாழ இயலாதவளாகிறாள் என்பதை கோப்பெருந்தேவி மூலம் படைத்து காட்டியுள்ளார். கண்ணகியை தெய்வமாக்கி வழிபட வைத்த பெருமை இளங்கோவடிகளையே சாரும் என்பது புலனாகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** உரைசால், கணிகையர், நாட்டுவளம், பண்பாட்டு கூறுகள், பெருங்காப்பியம்.

**முன்னுரை**

தமிழ் மொழியில் தோன்றிய முதல் காப்பியமாக கருதப்படும் சிலப்பதிகாரம் பெண்ணுரிமை பேசும் இலக்கியமாகவே கருதப்படுகிறது. சிலம்பை மையமாகக் கொண்டு இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைப் படைத்துள்ளார். இக்காப்பியத்தில் பெண் பாத்திரங்கள் மிகுதியாக காணப்படுகின்றன. காப்பிய நோக்கங்களில் ஒன்று பெண்மையை போற்றுவது "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தல்" என்பது சிலப்பதிகாரம் உணர்த்தும் உண்மை. இக்காப்பியம் பண்பாட்டுக் கூறுகள் நிறைந்து காணப்படுகின்றன. சிலப்பதிகாரம் ஒரு முத்தமிழ் காப்பியம் ஒப்பற்றக் காப்பியம். கி.பி. 2ஆம் நூற்றாண்டில் தோன்றியது.

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

தமிழ்மொழியால் முகிழ்ந்த இச்சிலப்பதிகாரம் தமிழரின் பெரும் கொடையாகத் திகழ்கிறது. மூவேந்தர் பெருமை. நாட்டுவளம், தமிழரின் பண்பாடு, நாகரீகம், கலைகள், அணிமணிகள், சமநிலைகள், மக்கள் வாழ்வியல், வணிகம், விழாக்கள் போன்றவற்றை தன்னுள் கொண்டுள்ள பெருங்காப்பியமாகவே உள்ளது. இதற்கு சிறப்புமிக்க இக்காப்பியத்தில் இடம்பெறும் பெண் பாத்திரங்களை அக்கால சமூகச் சூழலோடு ஆராயும் நோக்கில் சிலப்பதிகாரத்தில் பெண்கள் என்னும் இவ் ஆய்வு அமைந்துள்ளது.

**கண்ணகி**

புகார் நகரில் மிக்க செல்வ வளமிக்க குடும்பத்தில் பிறந்து 12 வயதுடைய கண்ணகி மிகச் சிறந்த பெருங்குணங்கள் உடையவள்.திருமகள் இவளைப் போன்ற அழகுடையவள் அருந்ததி இவள் (கண்ணகி) போன்ற கற்பு உடையவள் கோவலனை மணந்து சில ஆண்டு காலம் மகிழ்ச்சியாக வாழ்ந்தவள். கோவலன் மாதவியிடம் சென்றதால் கணவன் வரும் வரையில் 13 ஆண்டுகள் அவன் வருகைக்காகப் பொறுமையுடன் ஆற்றியிருந்தாள். அவளுடைய பார்ப்பன தோழி தேவந்தி இழந்தக் கணவனை மீண்டும் பெறுவதற்காகச் சடங்குப் பூர்வமான வழிபாடு ஒன்றைச் செய்ய அழைக்கிறாள் பீடு அன்று என்று கூறி அதனை மறுத்துக் கணவன் தானாக மனம் மாறி வர வேண்டுமே தவிர வழிபாட்டு சடங்குகள் என்ற நம் முயற்சியால் அவனை வரவழைப்பது பெருமையுடைய செயல் ஆகாது என்கிறாள் கண்ணகி பொறுமை தளராத உறுதிப்பாடு உடையவளாகக் கண்ணகியின் ஆளுமை வெளிப்படுகிறது.

**குடும்பப் பண்பு**

பிரித்து சென்ற கோவலன் கண்ணகியிடம் திரும்பி வந்து தன் தவறுகளை உணர்ந்து பேசுகிறான். வறுமை தன்னைப் பார்த்து நகைப்பதாக அவள் கூறுகிறான். அதுக்கேட்டு முறுவலோடு கூடிய நகைமுகத்தைக் காட்டித் தன் காற்சிலம்புகளைக் கண்ணகி தருகிறாள். இன்முகம் காட்டி ஆறுதல் கூறி தன்னுடைய கைப்பொருளைக் கணவனுக்காகத் தரும் குடும்பப் பெண்ணின் பண்புகள் இவை வாணிகம் செய்து பொருளீட்ட மதுரை செல்ல எண்ணியிருப்பதைக் கூறி தன்னோடு உடன் வருவதை கோவலன் கூற அதை மறுக்காமல் ஏற்று உடன் நிழலாகப் பின் தொடர்வது அன்றைய சமூகச் சூழலில் பெண்ணின் இல்லற மகளீரின் பண்பு வெளிப்படுகிறது.

**மன்னிக்கும் பண்பு**

கவுந்தியடிகள் கண்ணகி கோவலன் மூவரும் சோலையில் தங்கி இருந்த போது பரத்தை ஒருத்தியும் தூர்த்தன் ஒருவனுமாக கேலி பேசி அவர்களை முன் காட்டில் நரிகளாக ஆகுமாறு துறவியான கவுந்தியடிகள் சபிக்கிறாள். அவர்கள் நெறிகெட்டவர்கள் அறியாமையால் பேசினர் என்று கூறி அவர்களுக்குச் சாபவிமோசனம் எப்போது என்று கேட்டு பெறுகின்றனர். கண்ணகி கோவலன் இருவரும் தண்டனை (சாபம்) வந்ததும் மகிழாமல் வருத்தப்பட்டு தண்டைன கூடாது என்றும், சாபவிடுதலை வேண்டும் என்பதிலிருந்து கோவலன் கண்ணகி இருவரிடம்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

உள்ள தவறு செய்தவரையும் மன்னிக்கும் பரிவும் பெருங்கருணை வெளிப்படுகிறது. தனக்கு துன்பம் செய்தவரையும் மன்னிக்கும் இக்கண்ணகியின் இப்பண்பு கோவலன் கொலை செய்யப்பட காரணமாக இருந்த பாண்டிய மன்னனையே மன்னிக்கும் பெருங்கருணையாக வெளிப்படுகிறது. தென்னவனாகிய பாண்டியன் தீமை இல்லாதவன் அவன் என் தந்தை நான் அவள் மகள் என்று அவள் (கண்ணகி) கூறிவாதாக வஞ்சிக் காண்டத்தில் இடம்பெறுகிறது.

**தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன் கோயில்**

**நல்விருந்தாயினான் நானவன் தன்மகள் (சிலம்பு., 29. பா. 10)**

பாண்டிய மன்னன் தீமை செய்யாதவன் அவன் தேவருலகில் இந்திரன் அரண்மனையில் நல்ல விருந்தினனாக உள்ளான். நான் அவனுடைய மகள் என்பது இதன் பொருள் என கண்ணகியின் பண்பு நலன்களைப் புகார் காண்டத்தின் மூலம் அறியமுடிகின்றது. கதையின் திரும்ப நிகழ்ச்சிகளையெல்லாம் சிலம்பை அடிப்படையாகக் கொண்டு காப்பியம் படைக்கப்பட்டிருக்கிறது. கண்ணகியைக் காப்பியத் தலைவியாகக் கொண்டும் கண்ணகியின் சிலம்பை மையமாகக் கொண்டும் காப்பியம் படைக்கப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் ஆரம்பம் முதல் முடிவு வரை கண்ணகியின் பெருமைபற்றி பேசப்பட்டிருக்கின்றது. சோழநாட்டில் வணிகர் குடியில் பிறந்த கண்ணகி மாதவியிடத்தில் பொருளையெல்லாம் இழந்த தன் கணவன் கோவலனோடு பாண்டிய நாடு சென்று கணவன் தவறாகக் கொலையுண்ட நேரத்தில் தன் கணவன் கள்வன் அல்ல என்பதை பாண்டிய மன்னனிடம் முறையிட்டு நீதியை நிலைநாட்டி மன்னன் தவறுணர்ந்து அழிவதற்கு காரணமாகிறாள். கண்ணகி தனியாக நின்று தன் கணவன் மீது சுமத்தப்பட்ட பழியைத் தகர்த்தெறிகிறாள். "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" என்ற உண்மையைக் கண்ணகி வாயிலாக உணரச் செய்கிறார் இளங்கோவடிகள்.

**மாதவி**

தேவலோகத்தின் ஊர்வசி மரபில் வந்தவள் அவள் ஆடல் பாடல் அழகு என்ற மூன்றிலும் வல்லவள் 5 வயது முதல் தொடங்கி 12 வயது முடிய ஏழு ஆண்டுகள் ஆடற்கலை பயின்றவள். 12 வயதில் புகார் நகரில் சோழமன்னன் அவைகளத்தில் அரங்கேற்றம் கண்டவள் அவளுடைய ஆடலைப் பாராட்டித் தலைக்கோல் என்ற பட்டத்தை அரசன் அளித்தான். கோவலனுடன் 13 ஆண்டுகள் மனையறம் நடத்தி மணிமேகலையைப் பெற்றுத் தாயாகவும் விளங்கினாள். கணிகையர் குலத்தில் பிறந்தாலும் கொண்ட கணவன் கோவலனைத் தவிர வேறு ஒருவனை கனவிலும் நினையாத குலப்பெண் ஒழுக்கம் பூண்டு மாதவி வாழ்ந்தாள். கானல்வரிப் பாட்டை கோவலன் பாடிய போது அவன் மனம் மகிழ அவள் எதிர்ப்பாட்டுப் பாடினாள். கோவலன் அவளைத் தவறாகப் புரிந்துக் கொண்டதன் விளைவாகப் பிரிவு ஏற்படுகிறது. அதில் மாதவியின் தவறு ஏதுமில்லை. கோவலன் பிரிவைத் தாங்க முடியாமல் காதல்மிக்க மனநிலையில் வசந்தமாலை வழி கடிதம் அனுப்புகிறான். அவன் வருவான் என்று

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

ஆர்வமும் எதிர்ப்பார்ப்பும் கொண்டு காத்திருப்பவளாக மாதவி விளங்குகிறாள். இளங்கோவடிகள் மாதவியை குறிப்படும்போது, "பிறப்பில் குன்றாப் பெருந்தோள் மடந்தை" எனக் குறிப்பிட்டு குணநலனை சிறப்பிக்கின்றார். மாதவி கணிகையர் குலத்தில் பிறந்திருந்தாலும் கற்பிற்சிறந்தவளாகவே கருதப்படுகிறாள். கோவலனை மட்டுமே தனி மனதில் கொண்டு இருப்பவளாக படைக்கப்பட்டிருக்கிறாள். அவன் இல்லாத நிலையில் துறவறம் மேற்கொள்கிறவளாக காட்டடப்படுகிறாள்.

**தேவந்தி**

கண்ணகியின் உயிர்தோழியாக விளங்குபவள் தேவந்தி ஆவாள் தேவந்தியிடம் கண்ணகி தான் கண்ட கனவை குறிப்பிடுகிறாள். அதற்கு தேவந்தி பூம்புகாரில் உள்ள சோமகுண்டம், சூர்ய குண்டம் என்னும் புண்ணியத் தலங்களில் மூழ்கி அதன் கரையில் உள்ள காமவேள் கோட்டத்தைத் தொழுதால் உண்னைப் பிரிந்த கணவனை அடைவாய் இருமை இன்பமும் எய்தப் பெறுவாய் எனக் கூறுகிறாள் தேவந்தி.

கண்ணகி படும் துன்பத்திற்காகத் தானும் வருந்தினாள் சாத்தன் கோவிலை அடைந்து என் தோழியின் துன்பத்தை நீக்கி அருள்வாயாக என வேண்டுகிறாள். பின்பு கண்ணகியிடம் வந்து பிரிந்த கணவனைப் பெற்று வாழ்க என வாழ்த்துக் கூறினாள்.

தேவந்தி பார்ப்பனப் பெண். கணவனைப் பிரிந்து வாழ்பவள். கண்ணகியின் ஆளுமைப் பண்பு வெளிப்படக் காரணமாக அமைகிறாள். கண்ணகி தான் கண்ட கனவை இவளிடம் கூறுகிறாள். அத்துடன் கணவனைப் பிரிந்து துன்பப்பட போனப் பிறப்பில் செய்யாமல் விட்ட நோன்பு காரணம் என்று கூறி வழிபாட்டு சடங்கு ஒன்றை இப்பிறப்பால் செய்து பிரிந்து போன கணவன் வருமாறு செய்யலாம் என்று ஆறுதலும் துன்பமும் நீக்குவதற்கான வழியும் கூறுகிறாள் அன்றைய கால சமூக அமைப்பில் பார்ப்பன குலப் பெண்ணிடம் காணப்பட்ட நம்பிக்கை பழம்பிறப்பில் செய்த வினைப்பயன் இப்பிறப்பில் வரும் துன்பத்தை மாற்றுவதற்கான நோன்பு வழிப்பாட்டுச் சடங்கு இவைகளை நம்பி தன் தோழிக்குக் கூறும் பண்பைத் தேவந்தியிடம் காணலாம்.

**கவுந்தியடிகள்**

கவுந்தி ஒரு சமண சமயப் பெண் துறவி புகாருக்கு மேற்கே ஒரு காவரத் தொலைவில் இழுத்த கவுந்திப்பள்ளி என்னும் இடத்தில் தங்கியிருந்தார். ஆணாயினும் பெண்ணாயினும் உயர்ந்தவர்களை அடிகள் என்று சொல்லும் மரபு உண்டு கோவலன் தீயொழுக்கம் புரிந்திருப்பினும் கண்ணகிக்கு அவன் உயர்ந்தவனாகத் தோன்றியதால் 'அமுதம் உண்க' என அடிகள் கூறினாள்.

சமண சமயம் சார்ந்த பெண் துறவி அருகக்கடவுள் தவிர பிற சமயக் கடவுள் பெருமைகளைப் பிறர் பேசினால் கூடக் கேட்கிற பொறுமைகூட இல்லாத தீவிர சமயப் பற்றாளர் துறவிகளுக்கு இருக்க வேணடிய பொறுமை உணர்ச்சி வயப்படாத மனநிலை

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

பற்றற்ற மனநிலை என்பன இல்லாதவர் வழிப்பயணத்தில் சந்தித்து பழகிய கண்ணகியிடம் அளவற்ற பாசம் கொண்டவர் அதனால் சட்டென்று பொறுமையின்றிப் பரத்தை துர்த்தன் இருவரையும் சபிப்பவர் திருவரங்கம் அருகில் இவர் சந்திக்கும் சமய சமயம் பெருந்துறவியான சாரணர் "பவந்தருபாசம் கவுந்தி கெடுக என்று ஆசி கூறுகிறார்" துன்பத்தைத் தரும் பாசத்தைக் கவுந்திவிட்டுவிடுக என்று அவர் பொருந்தமாகவே கூறுகிறார் ஆயின் இறுதிவரை பாசமுள்ளவனாகவே கவுந்தியடிகள் விளங்குகிறாள்.

**மாலதி**

மாலதி என்பவள் பார்ப்பன பெண். ஒரு நாள் தன் மாற்றான் குழந்தை அழவே குழந்தையை எடுத்து பால் கொடுக்கிறாள். எதிர்பாராமல் பால் விக்கி குழந்தை இறந்து விடுகிறது. உடனே அவள் தனக்கு வரக்கூடிய பழியை நினைத்து கலங்குகிறாள். மாற்றாளும் தன் கணவனை அந்தணனும் திரும்பி வந்தால் தனி நிலையாதாகுமோ என எண்ணி வருந்துகிறாள். இறந்த குழந்தையைத் தோளில் கொண்டு பல கோயில்களிலும் சென்ற சதை உயிர்பித்து தரும்படி அங்குள்ள கடவுளை வேண்டினாள். மாலதியின் கருணை பின்பு பாசானிடச் சாத்தனுக்கு உரிய கோயிலை அடைந்தாள். அங்கே அவன் வரம் வேண்டிப்பாடு கிடந்தாள். அங்கே இடுபிணம் தின்னும் இடாகினிப்பேய் ஒன்று வந்து தவம் செய்யாதவர்க்குத் தேவர்கள் வரம் தரமாட்டார்கள் என்று கூறிச் செத்த குழந்தையைக் கையால் பற்றிச் சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்று தன் வயிற்று அகத்து இட்டு விழுங்கிவிட்டது. உயிர் நீங்கிய உடலும் அடையாளத்துக்கு கூட இல்லாமல் போய் விட்டது. இடி உண்ட மயில் போல் துடிதுடித்தாள் ஏங்கி அழுதாள் அன்னையே நீ அழாதே என்று கூறி பக்கத்தில் ஒரு சோலையில் கிடந்த ஒரு குழந்தையைக் காட்டி எடுத்துச் செல்க என்று அத்தெய்வம் கூறியது. பாசாண்டச் சாத்தனே அக்குழந்தை வடிவாகியது. மாற்றுக்குழந்தை கிடைத்தவுடன் அதனை வீட்டுக்கு எடுத்துச் சென்று தன் பழியைப் போக்கிக் கொண்டான். அந்த குழந்தை வளர்ந்து கல்விப் பெற்று பெரியவன் ஆகி அந்த குடும்பத்துப் பொறுப்புகளை ஏற்று வலியவன் ஆயினான். பெற்றோர்கள் மறைந்த பிறகு அவர்களுக்கு உரிய கடமைகளைச் செய்து மணமும் செய்து கொண்டான். தேவந்தி என்பவள் அவன் வாழ்க்கை துணைவியானாள். நாள்கள் சில நகர்ந்தன. அவளோடு நீடித்து வாழாமல் தான் தெய்வம் என்பதை அவளுக்கு உணர்த்தி எம்முடைய கோயிலுக்கு நீ வா என்று கூறிச் சென்றான் ஊரவர்களுக்கும் பதில் கூற வேண்டும். தேசாத்திரம் சென்ற கணவன் திரும்பி வருவதற்காக தான் கோயில் சென்று வழிபடுவதாக கூறி வழிபாடுகள் மேற்கொண்டு வந்தாள்.

**சாலினி**

சாலினி என்பவள் மறவர் குடியிலே தோன்றியவள். இவள் தெய்வம் ஏறப்பெற்ற நிலையில் கண்ணகியின் பெருமையை,

**இவளோ, கொங்கச் செல்வி, குடமனை ஆட்டி**

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

**தென் தமிழ்ப்பாவை செய்த தவக்கொழுந்து**
**ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய**
**திருமாமணி எனத் தெய்வம் உற்று உரைப்ப (வேட்டுவவரி. 47-50)**

என்று குறிப்பிடுகிறாள்.

**மாதரி**

கண்ணகியை அடைக்கலம் பெற்ற மாதரி மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாள். மதுரை நகரம் பெண்கள் அணியும் பொன் ஆபரணங்கள் இன்றியும், அவர்கள் அழகினை அழிக்கும் நிலையில் இயல்பாக அழகுடன் உள்ள உயிர் என் மகள் ஐயை, நீ ஏவும் வேலைகளைச் செய்வாள் பொன்னைப் போன்று உம்மைப் பாதுகாப்பேன் என்று குறிப்பிடுகிறாள் தெய்வமாகவே கண்ணகியை கண்ட மாதிரியின் மனப்பாங்கு உயர்ந்த பண்பாக காணப்படுகிறது.

**கோப்பெருந்தேவி**

பாண்டிய மன்னன் தவறாக கோவலனுக்கு தண்டனை வழங்கி இறந்த வேளையில் கோப்பெருந்தேவியும் உள்ளம் குலைந்து நடுங்குகிறாள் கணவன் திருவடிகளைத் தொழுது அக்கணமே விழ்ந்து இறந்தாள் என்பதை,

**கோப்பெருந்தேவி குலைந்தனள் நடுங்கி**
**கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல் என்று**
**இணை அடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி (வழக்குரைகாதை. 78-80)**

என்ற பாடல் வழி அறியமுடிகிறது. கணவன் இறந்த உடனே இறப்பது முதல்வகை கற்பாக கருதப்படுகிறது. கோப்பெருந்தேவி தீயக் கனவு காண்கிறாள். தான் கண்ட கனவு குறித்து முதலில் தோழிக்கும் ஆசானுக்கும் தெரிவிக்கின்றாள்.

**குடையொடு கோல் வீழ நின்று நடுங்கும்**
**கடை மணியின் குரல் காண்பென் காண் எல்லா**
**திசை இரு நான்கும் அதிர்ந்திடும்; அன்றி**
**கதிரை இருள் விழுங்கக் காண்பென்-காண் (வழக்குரைகாதை. 2-5)**

என்று சிலப்பதிகாரம் குடையும் செங்கோலும் கிழே விழுந்தது. இடைவிடாமல் கடைவாயில் மணியின் ஓசையும் கேட்டேன மணியோசை எட்டுத்திக்கும் அதிர்ந்து ஞாயிற்றின் இருள் விழுங்கியது என்று தன் நாட்டுக்கும் அரசனுக்கும் தீமை உண்டாகப்போகிறது. என்று பதறுகிறாள். வினைபயன் வேலைச் செய்யத் தொடங்குகிறது. நாடக நங்கையர், ஆடிப் ஆட்டத்தின் அழகில் மன்னன் தன்னை மறந்து இருப்பதை காணப்பொறுக்காத அரசியார் தலைவி வந்ததென்று பொய்சொல்லி செல்கிறாள் மன்னனும் வினை விரித்த வலையில் வாழ்கின்றான்.

கள்வனைப் பிடிப்பது பொற்கொல்லன் வேலையல்ல தற்செயலாக கள்வன் பொற்கொல்லன் பார்வையில் பட்டிருப்பினும் அதுபற்றி தகவல் ஊர்க்காவலரிடம் தராது வஞ்ச

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

நெஞ்சினன் பொற்கொல்லன் கள்வன் பிடிப்பட்டத் தகவலை மன்னனிடம் அறிவிக்கின்றான். கள்வனைச் சிறையில் வைக்குமாறு ஆணையிட்டு மறுநாள் அரசவைக்கு அவனை கொண்டு வரச் செய்து அவையிலுள்ள அமைச்சர்களுடன் ஆலோசித்து கள்வனுடைய வாக்குமூலத்தையும் கேட்டு அதன்பின் தீர்ப்பளிக்க வேண்டியது அரசனின் கடமை இந்த நடைமுறை சிலப்பதிகாரக் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால் அரசியின் ஊடலை மனம் குழப்பம் அடைந்திருந்த பாண்டிய வேந்தன் அந்த கடமைகளைக் கைவிட்டான். அரசன் குற்றவாளிகளுக்கு தண்டனை விதிப்பது அரியாசனத்தில் இருக்கும் போதுதான் மாறாக கோவலன் மீது கூறிய பொய் வழக்கில் அந்தபுறத்திற்கு சென்று கொண்டிருக்கும்போது இடைவழியில் மரணதண்டனை அளித்து தீர்ப்பளித்தான். மன்னன். மனைவியின் ஊடலை விரைவில் தீர்க்க வேண்டுமென்ற அவசரத்திற்கும் என் தேவியின் காற்சிலம்புகள் கள்வனுடைய கையில் இருந்ததென்றால் அவனை கொன்று 'அச்சிலம்பு கொணர்க' என்று மன்னவன் காவலர்களுக்கு கட்டளைப் பிறப்பித்தான் கள்வனை மன்னன் விசாரிக்கவில்லை பொறுப்பை கொலைஞர்களிடையே விட்டுவிட்டான். பாண்டிய மன்னன் இதற்கு இளங்கோவடிகள்.

**வினைவிளை காலம் ஆதலின் யாவதுஞ்**
**சினையலர் வேம்பன் தேரான் (கொலைக்களக் காதை. 48-49)**

என கூறுகிறார்.

கோவலன் நீதி விசாரிக்கப்படாமல் கொலைசெய்யப்பட்டிருக்கிறான். தான் செய்த தவறுக்கு தண்டனையாக அரசன் உயிர்தியாகம் செய்கிறான். கோப்பெருங்தேவியும் கணவனை இழந்தோர்க்கு புகலிடம் பெறுவதற்கு இந்த உலகில் எதுவும் இல்லை என்று கருதி தன் கணவனின் திருப்புகழைத்தொட்டு தொழுது கொண்டே தானும் உயிர் நீத்தார் பொதுவாக பெண்கள்,

**மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்**
**கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் வையைக்கோன்**
**கண்டவே தோற்றான்அக் காரிகைதன் சொற்செவியில்**
**உண்டனவே தோற்றான் உயிர் (வழக்குரைக்காதை. 85-90)**

என்கின்றது.

**முடிவுரை**

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் சமணத்துறவி ஆயினும் அரச குடும்பத்தில் பிறந்தவர் பெண்களுக்கு பெருமை சேர்க்கும் விதமாக எடுத்த காப்பியமே சிலப்பதிகாரம் கண்ணகி, மாதவி, கோப்பெருந்தேவி இம்மூவரும் அக்காலச் சூழலுக்கு ஏற்பபடைத்துக் காட்டியிருக்கிறார். கண்ணகி கணவனுக்குக் கட்டுப்பட்டு பேசாமடந்தையாக வாழ்பவள். கணவன் பிரிவால் இல்லற கடமையை ஆற்ற முடியாததை நினைத்து வருந்துபவள் கணவன்

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

மகிழ்ச்சியைத் தவிர தன்னைப் பற்றி சிந்திக்காதவள் என்ற நிலையில் கண்ணகியை அடையாளப்படுத்துகிறார். மாதவி கணிகையர் குலத்தில் பிறந்தாலும் குலவழக்குப்படி வாழவிரும்பவில்லை. ஒருவனுக்கு ஒருத்தி என்ற கற்பு நிலையைச் சமுதாயத்திற்கு உணர்த்தவே கோவலனின் அறிவையும் பொருள் விளையாடி என்று வாழ்ந்துவரும் கணிகையர் குலப்பெண்களும் கற்புக் கரசிகளே என்பதை மாதவி மூலமும் உலகுக்கு உணர்த்தியிருக்கிறார். அடிகளார் கோப்பெருந்தேவி அரசியானாலும் கணவன் நாடக மங்கையர் அழகில் மயங்குவதை ஏற்றுக் கொள்ளாதவளாய் ஊடல் கொள்கிறாள். மன்னனே ஆயினும் மனைவியின் ஊடலை தணிப்பதில் ஆர்வம் உடையவனாக இருக்கிறான். பாண்டிய மன்னன் கணவன் இறந்ததால் மனைவி வாழ இயலாதவளாகிறாள் என்பதை கோப்பெருந்தேவி மூலம் படைத்துக் காட்டி தேவியரும் கற்பில் மேம்பட்டவள் என்பதையும் அடிகளார் அறிவுறுத்துகிறார். கற்புக்கரசிகளுக்குக் கடவுள்களே அடிபணிவர் என்றும் தேவர்கள் இறங்கி வந்து புஷ்பக விமானத்தில் கண்ணகியை ஏற்றிச் சென்றனர் என்று கூறி பெண்களின் கற்புக்கு மகுடம் சூட்டிவிட்டார் அதோடு விடாது. கண்ணகியைக் கடவுளாக்கி மக்கள் வழிபடுகின்றதால் பெண்ணாகிய கண்ணகியை வழிபட வைத்த பெருமை இளங்கோவடிகளை சாரும் என்பதில் ஐயமில்லை.

**குறிப்புகள்**

[1] சாமிநாதையர், உ.வே. (தொ.ஆ.). *சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும்.* தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, பத்தாம் பதிப்பு, 1985, தஞ்சாவூர்.

[2] சிவஞானம், ம, பொ. *சிலப்பதிகாரத் திறனாய்வு.* பூங்கொடி பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை, 1999.

[3] சிவஞானம், ம, பொ. *சிலப்பதிகார ஆய்வுரை.* பூங்கொடி பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை, 2001.

[4] யோகாம்பாள், ந. *காப்பிய மகளிர் ஒரு புதிய கண்ணோட்டம்.* முல்லைப் பதிப்பகம், சென்னை, 2015.

[5] வேங்கடராமன், முனைவர், சு. *காப்பிய இலக்கியம்.* இக்கால இலக்கியத்துறை மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 2005.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.